

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயலாளர் ஆர்.காந்தி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா ஆகியோர் சாலை விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டு உயிரிழந்த காவேரிப்பாக்கம் பேரூராட்சி, செல்வவிநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த இளையராஜா (வயது 37) என்பவரின் குடும்ப உறுப்பினர்களின் சம்மதத்துடன் உடல் உறுப்புகள் தானம் செய்தமைக்காக அரசு மரியாதை செய்யும் பொருட்டு இறந்தவரின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். உடன் லதா நரசிம்மன், வட்டாட்சியர் ராஜலட்சுமி, பாஸ் என்கிற நரசிம்மன், ஓச்சேரி பாலாஜி, எம்.தெய்வசிகாமணி, பொதுக்குழு உறுப்பினர் சி.மாணிக்கம் ஜெ.திருமால் தமிழரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல இளைஞர் அணிப் பொறுப்பாளரும், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளருமான ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. மண்டல மாநாட்டிற்கு சிறப்பாக இளைஞர்களை அழைத்து வருவது குறித்து விளக்கம் அளித்தார். கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இளைஞர் அணியினர் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### மரக்காணம் ஒன்றியம்

# சலவாதி, வேங்கை ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நல உதவிகளை வழங்கினார்! ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை!

திண்டிவனம், செப். 26-

மரக்காணம் ஒன்றியம் சலவாதி, வேங்கை ஆகிய ஊராட்சியில்நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றிய பெருந்தலை வர் தயாளன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் சலவாதி, வேங்கை ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலையில் வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர்கள் சலவாதிசசிகலா ஏழுமலை, வேங்கைமுனுசாமி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

மேலும் முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களையும்,மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம் வளத்தி ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினை அவர் வழங்கினார்.

முகாமில் சலவாதி, வேங்கை ஆகிய ஊராட்சிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஓய்வூதியம், இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை கேட்டு மனு செய்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மணிமாறன், இளவரசி,ஒன்றிய கவுன்சிலர்கள்வேலாயுதம், அமுதா கிருஷ்ணமூர்த்தி, நாக ஜோதி கணேஷ், ஊராட்சி மன்றத் துணை தலைவர்கள் சரண்யா ராமச்சந்திரன், பிரகாஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை, ஒன்றிய நிர்வாகிகள்ஆதிகேசவன், மீனா குமாரி, தேவதாஸ்,முருகன் அணி நிர்வாகிகள் ராஜா, வசந்த், கலைமணி, தினேஷ் ராஜ், தினேஷ், அன்பரசு, சேகர்,நிர்வாகிகள் இந்திர மூர்த்தி, சேகர் ,செல்வம், வேங்கைஊராட்சி நிர்வாகிகள்பழனிவேல் ,கோபால். ஞான தாஸ், விமலா, செல்வராஜ், கீழ் சித்தாமூர் குப்புசாமி,தர்மன், ராஜமாணிக்கம்,குமார், ரஜினி, ஆறுமுகம், சங்கீதா, நித்தியா, உள்ளிட்ட நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மண்டல பொறுப்பாளர்–அமைச்சர் தங்கம் தென்னரசு - தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

# மேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப்.26-



வருகிற 27ஆம் தேதி மேலூரில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடை பெறுவதாகவும் இதில் மண்டல பொறுப்பாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு, மேலூர் தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி என். சிவா எம்.பி., உள்ளிட்டோர் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு வியூகங்களை வகுத்து தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக ஏற்கனவே மாவட்டம் தோறும் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களை தொகுதி மேற்பார்வையாளரக நியமித்துள்ளார்

அதன்படி மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு திருச்சி என்.சிவா எம்பி நியமிக்கப்பட்டுள்ளார்

அதனை முன்னிட்டு நாளை (27.09.2025-சனிக்கிழமை) காலை 10 மணிக்கு மேலூரில் அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள லதா திருமண மண்டபத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம் பி, தொகுதி பொறுப்பாளர் வ.து.ந. ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் நடவடிக்கை தொடர்பாக ஆய்வு நடத்தி பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்

இக்கூட்டத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பிஎல் ஏ டு, பி எல் சி உள்ளிட்ட வாக்குச்சாவடி பாகமுகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### விழுப்புரம் (மத்தியம்) மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் - தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை

விழுப்புரம், செப். 26-



விழுப்புரம் ( மத்தியம் ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி, தேர்தல் மண்டல பொறுப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் MRK.பன்னீர் செல்வம் அவர்களின் வழிகாட்டுதலின்படி விழுப்புரம் (மத்திய) மாவட்ட தி.மு.க சார்பில் ( BLA 2 வாக்குச்சாவடி முகவர்கள்) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

நாளை (27.09.2025-சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

நாளை (27.09.2025-சனிக்கிழமை) 3..00 மணிக்கு வழுதாவூர், சாமிக்கண்ணு லட்சுமி அம்மாள் மண்டபத்தில், வானூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய நகர பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் ( மத்தியம்) மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூரைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர் செ.குபேந்திரன், 8வது வார்டு செயலாளர் எஸ்.ஏழுமலை, 10வது வார்டு செயலாளர் எல்.மணிமுத்து, 12வது வார்டு செயலாளர் எல்.கண்ணன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 25.09.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் - தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், செப். 24-



விழுப்புரம் (தெற்கு) மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடுதுணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் மற்றும் தேர்தல் மண்டல பொறுப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் MRK.பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதலின்படி விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க சார்பில் ( BLA 2 வாக்குச்சாவடி முகவர்கள் ) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

28.09.2025 (ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணிக்கு திருக்கோவிலூர் தேவிமுருகன் திருமண மண்டபத்தில் திருக்கோவி லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

28.09.2025 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைகூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ.ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என். முருகன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் , தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பா ளர்கள்அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.

# கழகசட்டதிட்டவிதி:18, 19-ன்படி,

# தி.மு.க.செய்தித் தொடர்புக் குழுதுணைத் தலைவர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதி:18, 19-ன்படி, தி.மு.க. செய்தித்தொடர்புக்குழு துணைத்தலைவராக மருதுஅழகுராஜ் (789, வேலுநாச்சியார்தெரு, திருப்பத்தூர், சிவகங்கைமாவட்டம்) அவர்கள்தலைமைக்கழகத்தால்நியமிக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 25.09.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தெற்கு ஒன்றியம், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.டி. அசோக்குமார் தலைமையில் கெஜல்நாயக்கன்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் என்.கே. ஆர்.சூரியகுமார், ஊராட்சி மன்ற தலைவர் பிரபுசரவணன் கூட்டுறவு பதிவாளர் மீனாட்சி, ஆ.சம்பத்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர், வாணாபுரம் வட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், சூளாங்குறிச்சி, பள்ளிப்பட்டு, வேளானந்தல், பேரால், சாத்தபுத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு சூளாங்குறிச்சி ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” எனும் சிறப்பு திட்ட முகாமினை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் விண்ணப்ப மனுக்களைப் பெற்று, விண்ணப்பங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.